©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 70] CHENNAI, THURSDAY, MARCH 11, 2010
Maasi 27, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம்.**

**விழுப்புரம் மாவட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், இளங்காடு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

[*ந.க.எண் அ3/2183/08/உ.இ.(ஊ).*]

**No. VI(2)/81(a-1)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 206, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, இளங்காடு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஊராட்சி நிதிக் கணக்கில் உள்ள தொகையினை மதிப்பீடு மற்றும் அளவுகள் மேற்கொள்ளாமலும், துணைப் பட்டியல் இல்லாமலும், ஊராட்சி மன்றத்தின் முறையான அனுமதி இல்லாமல் தொகையினை முறைகேடாக செலவினம் மேற்கொள்ள ஊராட்சி மன்றத் தலைவருக்கு காசோலையில் கூட்டாக கையொப்பமிட்டு உடந்தையாக இருந்து ஊராட்சி மன்ற துணைத் தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, ஊராட்சிக்கு இழப்பினை ஏற்பட காரணமாக இருந்ததற்காக இளங்காடு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. ஆர். குருமூர்த்தி என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
2010 மார்ச் 10.

**இரா. பழனிசாமி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

**விழுப்புரம் மாவட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், இளங்காடு ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

[*ந.க.எண் அ3/2183/08/உ.இ.(ஊ).*]

**No. VI(2)/81(a-2)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, இளங்காடு ஊராட்சி மன்றத் தலைவர் ஊராட்சி நிதிக் கணக்கில் உள்ள தொகையினை மதிப்பீடு மற்றும் அளவுகள் மேற்கொள்ளாமலும், துணைப் பட்டியல் இல்லாமலும், ஊராட்சி மன்ற தீர்மானம் இயற்றாமலும் தொகையினை முறைகேடாக செலவினம் மேற்கொண்டு ஊராட்சி மன்றத் தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஊராட்சிக்கு இழப்பினை ஏற்படுத்திய இளங்காடு ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி கிருபாஜெயராஜ் என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
2010 மார்ச் 10.

**இரா. பழனிசாமி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.